# பெரம்பலூர் நகராட்சி

**2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 28.01. 2019 ம் தேதி மாலை 10.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>28.01.2019</td><td>பொருள் 01: தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ஆண்டு மற்றும் விதிகளின்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திருத்திய நடைமுறைகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008-ன்படி இந்நகர்மன்ற தீர்மானம் எண்.790 மற்றும் 791, நாள்.17.06.2016-ன்படிம் வழங்கப்பட்டு பொதுஏலம்விடப்பட்ட கீழ்கண்ட அட்டவணை 01 மற்றும் 02 குத்தகை இனங்களின் உரிமகாலம் 31.03.2019 உடன் முடிவடைகிறது. மேற்படி உரிம இனங்களுக்கு அரசாணையின்படி 01.04.2019 முதல் 31.03.2022 முடிய உள்ள மூன்றாண்டு கால தொகுப்பிற்கு உரிமம் வழங்க ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரப்பட வேண்டியுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>31.03.2019–ல் குத்தகை உரிமகாலம் முடிவடையும்<br>குத்தகை உரிம இனங்கள் விபரம்</th></tr>
<tr><td>1</td><td>அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் சரவணபவன் ஹோட்டல் அருகில் உள்ள இருசக்கர வாகனம் பாதுகாப்பிடத்தில் சைக்கள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம்</td></tr>
<tr><td>2</td><td>அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் சரவணபவன் ஹோட்டல் அருகில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம்</td></tr>
</table>
மேற்படி 2 உரிம இனங்களுக்கு ஒப்பந்தபுள்ளி அல்லது உரிமம் கோர கீழ்கண்ட அட்டவணை எண்.02–ல் ஒவ்வொரு உரிம இனங்களுக்கும் தனித்தனியே அதன் எதிரே கலம் (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை ஏல ஒப்பந்தபுள்ளி பொறுப்புத்தொகையாகவும், கலம் (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு குறைவில்லாத மதிப்புடைய சொத்து மதிப்பு சான்றும், சொத்துமதிப்பு சான்று இல்லாதபட்சத்தில் கலம்–(5)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கூடுதல் பொறுப்புத்தொகையாகவும் செலுத்த நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.</td><td>தீர்மான எண் : 1<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

# அட்டவணை எண்.02

## 2019-2022 வரை மூன்று ஆண்டு குத்தகை இனங்கள் விவரப்பட்டியல்

| வ. எண் | ஏலஇனத்தின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் பொறுப்பு தொகை தனித் தனியாக | சொத்துமதிப்பு சான்றிதழ் 01.01.2019–க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும் | சொத்துமதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் சரவணபவன் ஹோட்டல் அருகில் உள்ள இருசக்கர வாகனம் பாதுகாப்பிடத்தில் சைக்கள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 2,00,000 | 10,00,000 | 4,00,000 |
| 2 | அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் சரவணபவன் ஹோட்டல் அருகில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் | 1,00,000 | 5,00,000 | 2,00,000 |

**அலுவலககுறிப்பு:**

1) அட்டவணை 1ல் கண்டுள்ள (2) உரிம இனங்களுக்கு பொதுஏலம் / ஒப்பந்தபுள்ளி கோருவது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.
2) அட்டவணை 2ல் கண்டுள்ள ஏல / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை கூடுதல் வைப்புத் தொகை மற்றும் சால்வென்சி தொகை ஆகியவைகளுக்கு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
3) மேற்படி குத்தகை உரிம இனத்திற்கு பொதுஏலம் / ஒப்பந்தபுள்ளி கோருவது தொடர்பாக செய்திதாளில் விளம்பரம் செய்வது மற்றும் ஏலவிளம்பர அறிவிக்கை தயார் செய்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:914/2019/ஆ2**

| | | |
|---|---|---|
| 28.01.2019 | **பொருள் 02:** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ஆண்டு மற்றும் விதிகளின்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திருத்திய நடைமுறைகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008-ன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் குத்தகை உரிம இனத்தினை இந்நகர்மன்ற தீர்மானம் எண்.25 நாள்.23.03.2018-ன்படி குத்தகைதாரர் திருமதி.ம.ரீத்தா க/பெ. மதிவாணன் என்பவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி உரிமதாரர் ஏப்ரல் 2019 முதல் நடத்திவந்த நிலையில் தனக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் 31.03.2019 உடன் உரிமத்தினை முடித்து கொள்வதாகவும், 18.12.2018ல் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கு.<br>அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி மேற்படி குத்தகை உரிம இனத்திற்கு 2018-2019-ஆம் ஆண்டிற்கு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குத்தகைதாரர் வசம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் குத்தகை உரிமகாலம் 2019-2020 மற்றும் 2020-2021 ஆகிய இரண்டு நிதியாண்டிற்கும் ஒவ்வொரு நிதியாண்டின் உரிமத் தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்வு செய்யப்பட்டு அதனால் எழும் தொகையினை செலுத்திய பின்னர் உரிமத்தினை நடத்துவதற்கு குத்தகைதாரருக்கு அனுமதி வழங்கலாம். இருப்பினும் குத்தகைதாரர் திருமதி.ம.ரீத்தா க/பெ. மதிவாணன் என்பவர் 18.12.2018–ம் தேதிய விண்ணப்பத்தில் கடந்த 9 மாதங்கள் உரிமத்தினை நடத்தியபோது தனக்கு நஷ்டம் ஏற்பட்டதாகவும் அதனால் உரிமத்தினை தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும், மேற்படி குத்தகை உரிமத்தினை 31.03.2019–உடன் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார். எனவே, குத்தகைதாரரின் 18.12.2018–ம் தேதிய விண்ணப்பத்தின் அடிப்படையில் தினசரி மார்கெட்டில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்தினை, மேற்படி உரிம இனத்திற்கு பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதனால் ஏற்படும் சகலவிதமான இழப்பீட்டிற்கும் உரிமதாரர் திருமதி.ரீத்தா க/பெ. மதிவாணன், என்பவரிடமிருந்து இழப்பீட்டு தொகைகள் வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு **31.03.2019** உடன் உரிமத்தினை ரத்து செய்ய அனுமதிக்கலாம்.<br>எனவே, மேற்படி குத்தகை உரிமத்தினை அரசாணையின்படி 01.04.2019 முதல் 31.03.2022 முடிய மூன்றாண்டு காலத்திற்கு 2019-2020–ம் ஆண்டிற்கு புதிய உரிமம் வழங்க ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரப்பட வேண்டியுள்ளது.<br>மேற்படி உரிம இனத்திற்கு ஒப்பந்தபுள்ளி அல்லது உரிமம் கோர அட்டவணையில் கண்டுள்ளவாறு கலம் (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை ஏல ஒப்பந்தபுள்ளி பொறுப்புத்தொகையாகவும், கலம் (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு குறைவில்லாத மதிப்புடைய சொத்து மதிப்பு சான்றும், சொத்துமதிப்பு சான்று இல்லாதபட்சத்தில் கலம்–(5)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கூடுதல் பொறுப்புத்தொகையாகவும் செலுத்த நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. | தீர்மான எண் : 2<br>அனுமதிக்கப்பட்டது |

## அட்டவணை

## 2019-2022 வரை மூன்று ஆண்டு குத்தகை இனங்கள் விவரப்பட்டியல்

| வ. எண் | ஏலஇனத்தின் விபரம் | ஒப்புந்தப்புள்ளி மற்றும் ஏலம் பொறுப்பு தொகை தனித் தனியாக | சொத்துமதிப்பு சான்றிதழ் 01.01.2019-க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும் | சொத்துமதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் குத்தகை உரிமம் | 4,00,000 | 16,00,000 | 8,00,000 |

**அலுவலககுறிப்பு:**

1) திருமதி.ம.ரீத்தா, க/பெ. மதிவாணன் என்பவரது விண்ணபத்தில் தெரிவித்துள்ள கோரிக்கையினை ஏற்று உரிமத்தினை 31.03.2019–வுடன் ரத்து செய்ய அனுமதிக்கலாம்.
2) மேற்படி உரிம இனத்திற்கு பொதுஏலம் / ஒப்பந்தபுள்ளி கோருவது குறித்து மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.
3) மேற்படி உரிம இனத்திற்கு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை கூடுதல் வைப்புத் தொகை மற்றும் சால்வென்சி தொகை ஆகியவற்றினை மன்றம் அனுமதிக்கலாம்.
4) மேற்படி குத்தகை உரிம இனத்திற்கு பொதுஏலம் / ஒப்பந்தபுள்ளி கோருவது தொடர்பாக செய்திதாளில் விளம்பரம் செய்வது மற்றும் ஏலவிளம்பர அறிவிக்கை தயார் செய்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:14484/2018/அ2**

| | | |
|---|---|---|
| 28.01.2019 | **பொருள் 03 :** பெரம்பலூர் நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவு மேலாண்மை) 2018–2019 ஆம் ஆண்டு நிதியின் கீழ் நுண்ணுரம் தயாரிக்கும் மையம் இரண்டு இடங்களில் கட்டுவதற்கு சமத்துவபுரம் அருகில் உள்ள இடம் மற்றும் புதிய பேருந்து நிலைய இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ. ரூ.51.39 இலட்சம் வீதம் ரூ. 102.78 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண். 22566/2018/ பி3 நாள் . 20.08.2018 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து இரண்டு பகுதியில் நுண்ணுரம் உரக்கலவை மையம் அமைக்கும் பணிக்கு 12.09.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் மற்றும் M/s. ஏழுமலையான் கான்ட்ராக்டர் என்ற நிறுவனம் மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர்களுக்கு 19.09.2018 ம் தேதி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் வேலை உத்தரவு பெற்று கொண்டு M/s. ஏழுமலையான் கான்ட்ராக்டர் என்ற ஒப்பந்ததாரர் 06.12.2018 ம் தேதி கட்டுமான பணி துவங்க கட்டுமான பொருட்களுடன் மேற்கண்ட இடத்திற்கு சென்ற சமயம் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் மேற்படி இடத்தில் கட்டிடம் கட்டும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். அதன் பேரில் இந்நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில் மேற்கண்ட இடத்தில் பணி மேற்கொள்ள கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சம்பவம் குறித்து பெரம்பலூர் மாவட்ட ஆட்சியாளரிடம் ஆலோசனை பெறப்பட்டதில் பொது மக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் கட்டுமான பணிகளை நிறுத்தி விட்டு வேறு இடத்தினை தேர்வு செய்து பணி துவங்குமாறு மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடை வளாகத்தில் நுண்ணுரம் தயாரிக்கும் மையம் கட்டுமான பணி மேற்கொள்ளவும் மாற்று இடம் தேர்வு செய்தமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேலும் மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணி முடித்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்க இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு பதிலாக நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடை வளாகத்தில் இடமாற்றம் செய்து பணி செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 00664 /2018/இ1 | தீர்மான எண் : 3<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.01.2019 | **பொருள் 04:** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு நகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாநில தினசரி நாளிதழில் விளம்பரம் இயக்குநர் மாநில செய்தி மக்கள் தொடர்பு துறை தலைமை செயலகம் சென்னை அவர்கள் வழியாக விளம்பரம் வெளியிட்டமைக்கு Bright Advertising Chennai என்ற நிறுவனத்திற்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 44,226/– யை மேற்படி விளம்பரம் வெளிட்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 5220 /2018/இ2 | தீர்மான எண் : 4<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.01.2019 | **பொருள் 05 :** பெரம்பலூர் நகராட்சியின் தூய்மை இந்திய திட்டம் - 2018-2019 ஆம் ஆண்டு நிதியின் கீழ் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் 3 TPD Micro Compost Centre கட்டிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணி நடைபெறுவதை நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் அவர்கள் ஆய்வின் போது தற்போது இருக்கும் ஸ்தலம் பள்ளமாக இருப்பதால் மழை காலங்களில் மழைநீர் தேங்கி குப்பை லாரிகள் உள்ளே சென்று வர கடினமாக இருப்பதை கருத்தில் கொண்டு மேற்படி கட்டிடம் அமைய உள்ள இடத்தை கிராவல் கொண்டு பேருந்து நிலைய தார் சாலைக்கு சமமாக அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட கிராவல் அமைக்கும் பணிக்கு ரூ.8.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேலும் மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணி முடித்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்க இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 000066/2019/இ1 | தீர்மான எண் : 5<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.01.2019 | **பொருள் 06:** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான TN 46 T– 3929 எண் கொண்ட ஈப்பு வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகள் மற்றும் ஆயில் சர்வீஸ் புதிய நான்கு எண்ணிக்கையில் டயர் மாற்றப்பட்டு பணிகள் செய்த வகையில் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Shiva Automobiles ( P) Ltd என்ற நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 51753/– யை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்தற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2018/இ1 | தீர்மான எண் : 6<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.01.2019 | **பொருள் 07 :** இந்நகராட்சியின் பொது நிதி 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 27.12.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண் : 7<br>அனுமதிக்கப்பட்டது |

பொது நிதி 2018-2019

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 ல் உள்ள வெங்கடாஜலபதி நகர் பகுதியில் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணி | 5.00 | G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.06%<br>K. ராஜா ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 3.14% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த G. கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை |

கு.

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G. கண்ணன் ஒப்பந்ததார பெரம்பலூர் அவர்களின் (–) 0.06 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

**2.** மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர்அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 13954/2018/இ1

| | | |
|---|---|---|
| 28.01.2019 | **பொருள் 08 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகரின் முக்கிய சாலைகளும் மற்றும் சிறிய சாலைகளிலும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு சுமார் ஆறு வருடங்களுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே மேற்படி சாலையில் கனரக வாகனங்கள் செல்வதால் ஆள் இறங்கும் தொட்டி மற்றும் மேல் மூடி உடைந்து பொது மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இதனால் பொது சுகாதாரம் பேன வேண்டி நிலையில் உள்ளதால் அனைத்து பகுதிகளும் உடனுக்குடன் பழுது சீர் செய்ய ரூ.8.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகீறது.<br><br>ந.க.எண் : 00280/2019/இ1 | தீர்மான எண் : 8<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>28.01.2019</td>
<td>பொருள் 09 : பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை அதிகம் உள்ளதாலும் எதிர்வரும் கோடை வால வறட்சிடயினை சமாளிக்கும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளுக்கு வாடகைக்கு குடிநீர் வாகனம் அமர்த்தி குடிநீர் பொது மக்களுக்கு விநியோகம் செய்ய ரூ. 10.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேலும் மேற்கண்ட பணி குடிநீர் விநியோகப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 000688/2019/இ2</td>
<td>தீர்மான எண் : 9<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.01.2019</td>
<td>பொருள் 10 : பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை அதிகம் உள்ளதாலும் எதிர் வரும் கோடை வறட்சியினை எதிர்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் : 9,7,11,13,17 ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணிக்கு ரூ.10.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.மேலும் மேற்கண்ட பணி குடிநீர் விநியோகப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>தீர்மான எண் : 10<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.01.2019</td>
<td>பொருள் 11 : இந்நகராட்சியின் பொது நிதி 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 25.01.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th colspan="5">பொது நிதி 2018-2019</th></tr>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை (இலட்சம்)</th><th>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் MCC கட்டிடம் கட்டும் இடத்தில் கிராவல் நிரப்பும் பணி</td><td rowspan="2">8.40</td><td>M/s. ராஜ் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.27%</td><td rowspan="2">குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. ராஜ் கன்ஸ்ட்ரக்சன் பெரம்பலூர்<br>மதிப்பீட்டினை ஏற்கலாம்</td></tr>
<tr><td>K. ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 8.57% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table></td>
<td>தீர்மான எண் : 11<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அ.கு.**<br>**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.ராஜ்கன்ஸ்ட்ரக்சன்ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவ ர்களின் **(–)** 0.27 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.<br>**2.** மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர்அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 000066/2018/இ1 | |
| 28.01.2019 | **பொருள் 12 :** பெரம்பலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் ( திடக்கழிவு மேலாண்மை) **2018–2019** ம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட ஆலாம்பாடி சமத்துவபுரம் பகுதியில் நகரில் சேகரமாகும் குப்பைகளிலிருந்து நுண்ணுரம் தயாரிக்கும் மையம் ( MCC) கட்டுமான பணிக்கு ஏதுவாக மண் பரிசோதனை செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.3000/– யை முதல்வர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் தஞ்சாவூர் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் : 00664 /2018/இ1 | தீர்மான எண் : 12<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.01.2019 | **பொருள் 13 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் தூய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவு மேலாண்மை) 2018-2019 ம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் நகர் பகுதியில் சேகரமாகும் குப்பைகளை சேகரம் செய்து உரக்கலவை அமைக்கும் பணி ( MCC) கட்டுமான பணி மேற்கொள்ள ஏதுவாக மண் பரிசோதனை செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.3000/– யை செலுத்துமாறு முதல்வர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி கட்டணத்தை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் : 00664 /2018/இ1 | தீர்மான எண் :13<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.01.2019 | **பொருள் 14 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** மற்றும் **21** பகுதிக்குட்பட்ட ஆலாம்பாடி மற்றும் அராணரை பகுதியானது பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் சமயம் விரிவாக்கம் செய்யப்படவில்லை. தற்போது மேற்கண்ட பகுதியில் விரிவாக்கம் செய்யப்பட்ட புதியதாக வீடுகள் கட்டப்பட்டுள்ளதால் சாக்கடை நீர் சாலையில் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிப்பதை கருத்தில் கொண்டு மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியில் கூடுதலாக பாதாள சாக்கடை திட்டம் அமைக்க ரூ.**9.00** இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்**38984/2014/P1** நாள்.**11.01.2019** ம் நாளிட்ட கடிதத்தில் தூய்மை பாரத இயக்கம் **8** வது மாநில உயர் மட்ட குழு ( SHPC) திட்டத்தின் கீழ் பெரம்பலூர் நகராட்சிக்கு நான்கு எண்ணிக்கையில் பேட்டரியில் இயங்கும் வாகனம் வாங்க ரூ.**7.20** இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வாகனம் வாங்க ரூ.**7.20** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**2.** மேலும் மேற்கண்ட பணி திடக்கழிவு மேலாண்மை பணி என்பதால் பணியின் அவசரம் அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் :000621/2018/இ2 | தீர்மான எண் :14<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.01.2019 | **பொருள் 15 :** பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.307/3, Partல் 74.56 சென்ட் (32477.14ச.அ) என்ற பரப்பளவு இடத்தில் ரோஸ் கார்டன்–VII என்ற பெயரில் மனுதாரர் திருமதி.சரஸ்வதி க/பெ. ராமலிங்கம், கதவு எண்.**346**, மேட்டுத்தெரு, பெரம்பலூர் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1636/2018/பெ.ம, நாள்.7.12.2018 மற்றும் மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ.ந.ஊ.உ.இ (பெ.ம) எண்.258/2018 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br>மனுதாரர் மேற்படி மனைபிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனைஎண்.4, 5, 7, 8, மற்றும் 9, ஆகிய 5 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளார். மேற்படி மனைபிரிவில் பொதுஉபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திருமதி.சரஸ்வதி க/பெ. ராமலிங்கம், பத்திர பதிவு ஆவணம் எண்.6768/2018-ன்படி பெரம்பலூர் சார்பதிவகத்தில் 20.12.2018-ல் நகராட்சி ஆணையருக்கு தான பத்திரம் மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது<br>**1.** மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கு கிழக்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கு, **2–**வது அயிட்ட பொது பாதைக்கும் மேற்கு, 20 அடி அகலமுள்ள புதிய பேருந்து நிலையம், ரோஸ்நகர் சாலைக்கும் தெற்கு, புனிதவதி, கலியன், செல்வராஜ் இவர்கள் நிலத்திற்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி **20** தென்வடல் **203** உள்ள **4060** சதுரடி கொண்ட தென்வடல் பாதையும். | தீர்மான எண் :15<br>அனுமதிக்கப்பட்டது |

2. 1–வது அயிட்ட பொதுபாதைக்கும் கிழக்கு, சர்வே எண்.307/3–க்கும் மேற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும், பூங்காவிற்கும் தெற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி 90 தென்வடல் 20 உள்ள 1800 சதுரடி கொண்ட கிழமேல் பாதையும்.
3. மேற்படி சர்வேயில் கண்ட மனைக்கும் கிழக்கு, சர்வே எண்.307/3–க்கும் மேற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைக்கும் தெற்கு, 2–வது அயிட்ட பொது பாதைக்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி 31 நூ தென்வடல் ஜாதியடி 60 உள்ள 1890 சதுரடி கொண்ட பூங்கா (பொதுஇடம்)

மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 12 எண்ணிக்கை மனைகளில் 3 எண்ணிக்கை மனைகள் நீங்கலாக விற்கப்படாத ஒன்பது எண்ணிக்கை மனைகளில் மணைகள்.4, 5, 7, 8 மற்றும் 9 ஆகிய 5 எண்ணிக்கை மனைகளை மட்டும் மனைவரன்முறைப்படுத்தி அனுமதி வழங்ககோரியும் விண்ணப்பித்துள்ளார். மேற்படி தானபத்திர பதிவு ஆவணத்தின் மூலம் கீழ்கண்டுள்ளவாறு பொதுபாதைகள், திறவிடங்கள் மற்றும் பூங்கா ஆகியவற்றினை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கு மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறு மனை வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியுள்ளார்கள்

| வ. எண் | விபரம் | வசூலிக்கப்பட்ட கட்டணம் | கட்டணம் வசூலிக்கப்பட்ட | கருவூலகம் வங்கியின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வரன்முறைக்கட்டணம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட விபரம் (PlotRegularairation Charges) | 49700 | 28.12.2018 | (அரசு தலைப்பிற்கு) பாரத மாநில வங்கி பெரம்பலூர். |
| 2 | வளர்ச்சி கட்டணம் (Development chargers) | 124200 | 0022150 | நகராட்சி அலுவலகம் பெரம்பலூர். |

எனவே, மேற்படி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.307/3, Partல் 74.56 சென்ட் (32477.14ச.அ)என்ற இடத்தி அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைபிரிவினை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குவதற்க்கு மன்றத்தி பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு மனைஎண்.4, 5, 7, 8, மற்றும் 9, ஆகிய 5 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை வசூலிக்கப்பட்டதால் மனைகளை வரன்முறைப்பட்டுதியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைபிரிவில் பொது திறவிடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்து ஒப்படைக்கப்பட்ட இடங்களை ஆணையர் பெரம்பலூர் நகராட்சி என்ற முகவரிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வட்டாட்சியர் பெரம்பலூர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.
3. மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா இடத்தினை பாதுகாப்பதற்கு நான்கு புறமும் முன்வேளி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.14397/2018/F1**

| | | |
|---|---|---|
| | **பொருள் 16 :** பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.247/2B, Partல் 74 செண்ட் (32234.40ச.அ) என்ற பரப்பளவு இடத்தில் காமராஜர் நகர் என்ற பெயரில் மனுதாரர் திரு.தீனதயாளன் த/பெ. ரத்தினசாமி, எண்.18பி, திருப்பூர் குமரன் தெரு, பெரம்பலூர் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1644/2018/பெ.ம, நாள்.05.12.2018 மற்றும் மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ.ந.ஊ.உ.இ (பெ.ம) எண்.237/2018 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br><br>மனுதாரர் மேற்படி மனைபிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனை எண்.16, மற்றும் 16A ஆகிய 2 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளார். மேற்படி மனைபிரிவில் பொதுஉபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திரு.தீனதயாளன் த/பெ. ரத்தினசாமி பத்திர பதிவு ஆவணம் எண்.6663/2018-ன்படி பெரம்பலூர் சார்பதிவகத்தில் 18.12.2018-ல் நகராட்சி ஆணையருக்கு தான பத்திரம் மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 18 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 2 எண்ணிக்கை மனைகள் நீங்கலாக விற்கப்படாத 16 எண்ணிக்கை மனைகளில் மனைஎண்.16 மற்றும் 16A ஆகிய இரண்டு எண்ணிக்கை மனைகளை மட்டும் மனைவரன்முறைப்படுத்தி அனுமரி வழங்ககோரியும் விண்ணப்பித்துள்ளார்.<br><br>**<u>1–வது தாக்கு கிழமேல் அமைவிடமாக பாதை:</u>**<br><br>சர்வே எண்.247/2A–ல் கண்ட நிலத்திற்கும் கிழக்கு சர்வே எண்.247/3–ல் கண்ட 60 அடி அகல தென்வடல் சாலைக்கும் மேற்கு, மனை எண்கள்.9 To 16A–க்கும் தெற்கு மனைஎண்.1A To 7–க்கும் மற்றும் பூங்கா இடத்திற்கும் வடக்கு, இந்த நான்கெல்லையில் 6175.50 சதுரடிக்கு 573.72 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட கிழமேல் பாதை<br>**<u>2–வது தாக்கு பூங்கா அமைவிடம்:</u>**<br><br>சர்வே எண்.247/2A–ல் கண்ட நிலத்திற்கும் கிழக்கு, மனைஎண்.7–க்கும் மேற்கு, 23 அடி அகலமுள்ள கிழமேல் சாலைக்கும் தெற்கு, சர்வே எண்.247/2C–ல் கண்ட நிலத்திற்கும் வடக்கு இந்த நான்கெல்லையில் 2581.90 சதுரடிக்கு 239.86 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட பூங்காவும் மற்றும் பாதையும் இந்த நன்கொடை ஆவணத்திற்கு கட்டுப்பட்டது.<br>மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கு மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறு மனை வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியுள்ளார்கள். | தீர்மான எண் :16<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | விபரம் | வசூலிக்கப்பட்ட கட்டணம் | கட்டணம் வசூலிக்கப்பட்ட ரசீதுஎண்/ நாள் | கருவூலகம் வங்கியின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வரன்முறைக்கட்டணம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட விபரம் | 13001 | 07.01.2019 | (அரசு தலைப்பிற்கு) பாரத மாநில வங்கி பெரம்பலூர். |
| 2 | வளர்ச்சி கட்டணம் (Development chargers) | 32550 | 0022159 08.01.2019 | நகராட்சி அலுவலகம் பெரம்பலூர். |

எனவே, மேற்படி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.247/2B, Partல் 74 சென்ட் (32234.40ச.அ) என்ற இடத்தி அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைபிரிவினை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குவதற்கு மன்றத்தி பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு மனைஎண்.16 மற்றும் 16A ஆகிய 2 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை வசூலிக்கப்பட்டதால் மனைகளை வரன்முறைப்பட்டுதியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைபிரிவில் பொது திறவிடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்து ஒப்படைக்கப்பட்ட இடங்களை ஆணையர் பெரம்பலூர் நகராட்சி என்ற முகவரிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வட்டாட்சியர் பெரம்பலூர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.
3. மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா இடத்தினை பாதுகாப்பதற்கு நான்கு புறமும் முன்வேளி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.14050/2018/F1**

| | | |
|---|---|---|
| | **பொருள் 17 :** பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.325/3A,4A, 4B, 2E1, 2E2, 1B5D -ல் 1 ஏக்கர் 35 சென்ட் (58806.00 ச.அ) என்ற பரப்பளவு இடத்தில் மனுதாரர் திருமதி.அற்புதமணி மற்றும் சத்தியப்பிரியா, த/பெ. மாணிக்கம், வெங்கடேசபுரம் பெரம்பலூர் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1511/2018/பெ.ம, நாள்.23.10.2018 மற்றும் மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.உ.இ(பெ.ம).எண்.197/2018 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br>மனுதாரர் பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.325/3A,4A, 4B, 2E1, 2E2, 1B5D -ல் 1 ஏக்கர் 35 சென்ட் (58806.00 ச.அ) என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் 22 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 1 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 21 மனைகளில் மனைஎண்.14A, 16A, 17A, 18A, 19A, 25A, 26A, 33A, மற்றும் 34A, ஆகிய 9 மனைகளை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட கோரியுள்ளார்.<br>மனுதாரர் மேற்படி மனைபிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனை எண்.14A, 16A, 17A, 18A, 19A, 25A, 26A, 33A, மற்றும் 34A, ஆகிய 9 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளார். மேற்படி மனைபிரிவில் பொதுஉபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திருமதி.அற்புதமணி மற்றும் சத்தியப்பிரியா, த/பெ. மாணிக்கம், பத்திர பதிவு ஆவணம் எண்.6182/2018-ன்படி பெரம்பலூர் சார்பதிவகத்தில் 22.11.2018-ல் நகராட்சி ஆணையருக்கு தான பத்திரம் மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொதுதிறவிடங்கள் விபரம் பின்வருமாறு.<br>1. சர்வே எண்.325/1B5D–ல் கண்ட நிலத்துக்கும் கிழக்கு சர்வே எண்.325/5B– நிலத்துக்கும் மேற்கு மனை எண்கள்.32A, 33A, 34A, 35A, 29A-க்கும், 2வது தென்வடலான பாதைக்கும், 1வது பூங்கா இடத்துக்கும் தெற்கு சர்வே எண்.324/–, 328/–க்கும் வடக்கு இதில் கிழமேல் பாதையும், தென்வடல் ஜாதியடி 20 உள்ள 5600 சதுர அடி கொண்ட கிழமேல் பாதையும்.<br>2. முனை எண்கள்.32A, 26A, 20A, 15A-க்கும் 4வது கிழமேலான னாதைக்கும் கிழக்கு, மனை எண்கள்27A, 19A, 16A-க்கும் 1வது பூங்கா இடத்துக்கும், 5வது கிழமேல் பாதைக்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி 20 தென்வடல் ஜாதயடி கீழ்புரம் 216 1/2 மேல்புரம் 214 1/4 உள்ள 431 1/2 சதுர அடி கொண்ட தென்வடல் பாதையும்<br>3. சர்வே எண்.325/1B5D கநிலத்துக்கும், மனை எண்.12–க்கும் கிழக்கு மனை எண். 35A, 22A-க்கும் 4வது கிழமேலான பாதைக்கும் மேற்கு, சர்வே எண்.325/2–நிலத்துக்கும் தெற்கு, சர்வே எண்.324/– நிலத்துக்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி 20 தென்வடல் ஜாதியடி கீழ்புரம் 103 ¾ மேல்புரம் 101 1/2 உள்ள 2052 1/2 சதுர அடி கொண்ட தென்வடல் பாதையும், | தீர்மான எண் :17<br>அனுமதிக்கப்பட்டது |

4. மேற்படி சர்வேயில் கண்ட 3வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, 2வது தென்வடலான பாதைக்கும் மேற்கு, சர்வே எண்.325/2 நிலத்துக்கும், மனை எண்கள். 20A, 21A-க்கும் மனை எண்கள். 22A, 23A, 24A, 25A, 26A-க்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி வடபுரம் 202 1/2 தென்புரம் 174 தென்வடல் ஜாதியடி 20 உள்ள 3765 சதுரஅடி கொண்ட தென்வடல் பாதையும்,
5. 2வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, சர்வே எ.கள் 325/3B, 325/5A, 325/5B-நிலத்துக்கும் மேற்கு, மனை எண்கள்.18A, 19A-க்கும் தெற்கு, மனை எண்கள். 27A, 28A-க்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி வடபுரம் 81 1/2 தென்புரம் 83 ¾ தென்வடல் ஜாதியடி 20 உள்ள 1667 1/2 சதுரஅடி கொண்ட கிழமேல் பாதையும்,
6. சர்வே எண்கள்.325/1B5A, 325/1B5B நிலத்துக்கும் கிழக்கு, சர்வே எண். 325/3B-நிலத்துக்கும், நிலுவையிலுள்ள பாதைக்கும் மேற்கு, 2வது பூங்கா இடத்துக்கும், மனை எண்.13–க்கும் தெற்கு மனை எண்கள். 14A, 15A, 16A, 17A-க்கும், 20–அடி அகலமுள்ள தென்வடல் 2வது பாதைக்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி வடபுரம் 142 1/4 தென்புரம் 148 1/2 தென்வடல் ஜாதியடி 20 உள்ள 2017 1/2 சதுர அடி கொண்ட கிழமேல் பாதையும்,
7. 2வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, மனை எண்.29ஹ–க்கும் தெற்கு 1–வது கிழமேலான பாதைக்கும் வடக்கு இந்த நான்கொல்லையில் கிழமேல் ஜாதியடி இருபுரமும் 50 தென்வடலான ஜாதியடி கீழ்புரம் 51 1/2 மேல்புரம் 48 1/2 உள்ள 2500 சதுர அடி அளவுள்ள காலிஇடமும் (பூங்கா இடம்)
8. சர்வே எண்.325/7 நிலத்து.கூம் தெற்கு, 20 அடி அகலமுள்ள கிழமேல் 6வது பாதைக்கும் வடக்கு, மனை எண்.13–க்கும் மேற்கு, இதில் கிழமேல் ஜாதியடி வடபுரம் 104 1/2 தென்புரம் 99 1/2 தென்வடல் ஜாதியடி கீழ்புரம் 31 1/2 மேல்புரம் 0 உள்ள 1567.125 சதுர அடி அளவுள்ள முக்கோண வடிவிலான காலிஇடமும் (பூங்கா இடம்)

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கு மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறு மனை வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியுள்ளார்கள்

| வ. எண் | விபரம் | வசூலிக்கப்பட்ட கட்டணம் | கட்டணம் வசூலிக்கப்பட்ட ரசீதுஎண்/ நாள் | கருவூலகம் வங்கியின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வரன்முறைக்கட்டணம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட விபரம் (Plot Regularairation Charges) | 83150 | 21.01.2019 | (அரசு தலைப்பிற்கு) பாரத மாநில வங்கி பெரம்பலூர். |
| 2 | வளர்ச்சி கட்டணம் (Development chargers) | 207863 | 0023403 23.01.2019 | நகராட்சி அலுவலகம், பெரம்பலூர். |

| | | |
|---|---|---|
| | எனவே, மேற்படி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.325/3A,4A, 4B, 2E1, 2E2, 1B5D -ல் 1 ஏக்கர் 35 செண்ட் (58806.00 ச.அ) என்ற பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 22 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 1 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 21 மனைகளில் மனைஎண்.14A, 16A, 17A, 18A, 19A, 25A, 26A, 33A, மற்றும் 34A, ஆகிய 9 எண்ணிக்கை மனைகளை மட்டும் வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குவதற்க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.325/3A,4A, 4B, 2E1, 2E2, 1B5D -ல் 1 ஏக்கர் 35 செண்ட் (58806.00 ச.அ) என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள மனை எண்.14A, 16A, 17A, 18A, 19A, 25A, 26A, 33A, மற்றும் 34A, ஆகிய 9 எண்ணிக்கை மனைகளுக்கு மனைபிரிவு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைபிரிவில் பொது திறவிடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்து ஒப்படைக்கப்பட்ட இடங்களை ஆணையர் பெரம்பலூர் நகராட்சி என்ற முகவரிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வட்டாட்சியர் பெரம்பலூர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.<br>3. மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா இடத்தினை பாதுகாப்பதற்கு நான்கு புறமும் முன்வேளி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.12137/2018/F1** | |

| | | |
|---|---|---|
| | **பொருள் 18 :** பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.239/3A, 3B, 3C, 3D, 3E, 3F, 3G, 3H, 3I, 3J, 3K, 3L, 3M, 244/2C1, 2C2, 2C3, 232/1Apt-ல் 3 ஏக்கர் 92 சென்ட் xஎன்ற பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.முத்தையா மற்றும் 4 பேர்கள், த/பெ. அருணாச்சலம் கவுண்டர், கதவு எண்.255/4, அண்ணா நகர், மேட்டுத்தெரு, பெரம்பலூர் (மாவட்டம்) என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.328/2018/பெ.ம, நாள்.09.03.2018 மற்றும் மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.உ.இ(பெ.ம).எண்.50/2018 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br>மனுதாரர் பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.239/3A, 3B, 3C, 3D, 3E, 3F, 3G, 3H, 3I, 3J, 3K, 3L, 3M, 244/2C1, 2C2, 2C3, 232/1Apt-ல் 3 ஏக்கர் 92 சென்ட் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் 95 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 7 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 88 மனைகளில் மனைஎண்.1, 2, 6, 7, 8, 9, 14, 15, 16, 36, 39, 40, 45, 48, 52, 58, 61, 62, 64, 65, 96, 97, மற்றும் 99 ஆகிய 23 மனைகளை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட கோரியுள்ளார்.<br>மனுதாரர் மேற்படி மனைபிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனை எண்.1, 2, 6, 7, 8, 9, 14, 15, 16, 36, 39, 40, 45, 48, 52, 58, 61, 62, 64, 65, 96, 97, மற்றும் 99 ஆகிய 23 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளார். மேற்படி மனைபிரிவில் பொதுஉபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திரு.முத்தையா மற்றும் 4 பேர்கள், த/பெ. அருணாச்சலம் கவுண்டர், பத்திர பதிவு ஆவணம் எண்.1568/2018-ன்படி பெரம்பலூர் சார்பதிவகத்தில் 10.04.2018-ல் நகராட்சி ஆணையருக்கு தான பத்திரம் மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொதுதிறவிடங்கள் விபரம் பின்வருமாறு.<br>1 சர்வே எண்.232/1A–ல் கண்ட நிலங்களுகளுக்கும் கிழக்கு, மேற்கு, கீழ்கண்ட **2–**வது அயிட்ட பொது பாதைக்கும் தெற்கு, **20** அடி அகல தார்சாலைக்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி **22** தென்வடல் ஜாதியடி **35** உள்ள **770** சதுரடி கொண்ட தென்வடல் பாதையும்,<br>2 சர்வே எண்.232/1A–ல் கண்ட நிலத்திற்கும் கிழக்கு, சர்வே எண்.239/3J–ல் கண்ட நிலத்திற்கும் மேற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கு கீழேகண்ட **3, 4–**வது அயிட்ட பொதுபாதைக்கும் தெற்கு, மேலே கண்ட **1–**வது அயிட்ட பொதுபாதைக்கும், சர்வே எண்.232/1A–ல் கண்ட நிலத்திற்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி **216** தென்வடல் ஜாதியடி **20** உள்ள **4120** சதுரடி கொண்ட கிழமேல் பாதையும்,<br>**9.** மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும், கீழேகண்ட **6–**வது அயிட்ட பொது பாதைக்கும் கிழக்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும், கீழேகண்ட **5–**வது அயிட்ட பொதுபாதைக்கும், பூங்காவிற்கும் மேற்கு சர்வே எண்.244/2D4–ல் கண்ட நிலத்திற்கும் தெற்கு, மேலே கண்ட **2–**வது அயிட்ட பொதுபாதைக்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி **20** தென்வடல் ஜாதியடி 786 கீழ்புறம் 786 ½ உள்ள 15725 சதுரடி கொண்ட தென்வடல் பாதையும்,<br>**10.** மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும், கீழேகண்ட **5–**வது அயிட்ட பொது பாதைக்கும் கிழக்கு, மேற்படி | தீர்மான எண் :18<br>அனுமதிக்கப்பட்டது |

சர்வேயில் கண்ட மனைகளுக்கும் மேற்கு, 1–வது அயிட்ட பூங்காவிற்கும் தெற்கு, மேலே கண்ட 2–வது அயிட்ட பொதுபாதைக்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி 20 தென்வடல் ஜாதியடி 689 ½ உள்ள 13790 சதுரடி கொண்ட தென்வடல் பாதையும்,

11. 20 அடி அகலமுள்ள தென்வடல் பாதைக்கும் கிழக்கு, மேற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும் தெற்கு, வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி 88 தென்வடல் ஜாதியடி 1760 உள்ள சதுரடி கொண்ட கிழமேல் பாதையும்,
12. சர்வே எண்.239/1–ல் கண்ட நிலத்திற்கும் கிழக்கு, 20 அடி அகலமுள்ள தென்வடல் பாதைக்கும் மேற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும் தெற்கு, வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி வடபுறம் 42 தென்புறம் 44 தென்வடல் ஜாதியடி இருபுறமும் 20 உள்ள 860 சதுரடி கொண்ட கிழமேல் பாதையும்.
13. மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும் கிழக்கு, சர்வே எண்.244/2H1–ல் கண்ட நிலத்திற்கும் மேற்கு, சர்வே எண். எண்.244/2D4–ல் கண்ட நிலத்திற்கும் தெற்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும், 20 அடி அகலமுள்ள தென்வடல் பாதைக்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி வடபுறம் 107 ½ தென்புறம் 108 தென்வடல் ஜாதியடி இருபுறமும் 97 உள்ள 10453 சதுரடி கொண்ட பூங்கா–I (பொதுஇடம்)
14. 20 அடி அகலமுள்ள தென்வடல் பாதைக்கும் கிழக்கு, மேற்படி சர்வேயில் கண்ட மனைகளுக்கும் மேற்கு, தெற்கு, வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி 24 ½ தென்வடல் ஜாதியடி 44 உள்ள சதுரடி 1078 கொண்ட பூங்கா–II (பொதுஇடம்)

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கு மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறு மனை வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியுள்ளார்கள்

| வ. எண் | விபரம் | வசூலிக்கப்பட்ட கட்டணம் | கட்டணம் வசூலிக்கப்பட்ட ரசீதுஎண்/ நாள் | கருவூலகம் வங்கியின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வரன்முறைக்கட்டணம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட | 169500 | 18.01.2019 | (அரசு தலைப்பிற்கு) பாரத மாநில வங்கி பெரம்பலூர். |
| 2 | வளர்ச்சி கட்டணம்<br>(Development chargers) | 423750 | 0023034<br>22.01.2019 | நகராட்சி அலுவலகம், பெரம்பலூர். |

எனவே, மேற்படி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.239/3A, 3B, 3C, 3D, 3E, 3F, 3G, 3H, 3I, 3J, 3K, 3L, 3M, 244/2C1, 2C2, 2C3, 232/1Apt-ல் 3 ஏக்கர் 92 செண்ட் என்ற பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 95 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 7 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 88 மனைகளில் மனைஎண்.1, 2, 6, 7, 8, 9, 14, 15, 16, 36, 39, 40, 45, 48, 52, 58, 61, 62, 64, 65, 96, 97, மற்றும் 99 ஆகிய 23 எண்ணிக்கை மனைகளை மட்டும் வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குவதற்க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | <u>**அலுவலக குறிப்பு:**</u><br>**1.** அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.239/3A, 3B, 3C, 3D, 3E, 3F, 3G, 3H, 3I, 3J, 3K, 3L, 3M, 244/2C1, 2C2, 2C3, 232/1Apt-ல் 3 ஏக்கர் 92 செண்ட் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் மனைஎண்.1, 2, 6, 7, 8, 9, 14, 15, 16, 36, 39, 40, 45, 48, 52, 58, 61, 62, 64, 65, 96, 97, மற்றும் 99 ஆகிய 23 எண்ணிக்கை மனைகளுக்கு மனைபிரிவு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்படி மனைபிரிவில் பொது திறவிடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்து ஒப்படைக்கப்பட்ட இடங்களை ஆணையர் பெரம்பலூர் நகராட்சி என்ற முகவரிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வட்டாட்சியர் பெரம்பலூர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.<br>**3.** மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா இடத்தினை பாதுகாப்பதற்கு நான்கு புறமும் முன்வேளி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2538/2018/F1** | |
| | **பொருள் 19 :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் அரசு பள்ளிகளில் உள்ள கழிவறை மற்றும் வளாகம் சுத்தம் செய்யும் பணியினை "OUR LAND ENGINEERING (P) LTD", CHENNAI என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு 31.01.2019 உடன் ஒப்பந்தப்பணி காலம் முடிவடைவதால் பணியினை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்துதர கோரி 09.01.2019–ல் மேற்படி நிறுவனத்தினால் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் மூலம் பணி செய்வதற்கும் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்த வழங்குவதற்கும் துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பில் OUR LAND ENGINEERING (P) LTD", CHENNAI நிறுவனத்தினால் துப்புரவு பணி சிறப்பாக செய்து தருவதாலும் மேலும் ஓராண்டு காலத்திற்கு பணி செய்திட நீட்டிப்பு செய்யலாம் என தெரிவித்துள்ளதை ஏற்று மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிக்கவும், மேற்படி நிறுவனத்திற்கு 2018-2019 ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையிலான ஊதிய நிர்ணயித்தின்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**14,30000/-**க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு:**</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 01.02.2019 முதல் 31.01.2020 வதை நீட்டித்துக்கொள்வதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையிலான ஊதிய நிர்ணயத்தின்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2315/2017/H1** | தீர்மான எண் :19<br>அனுமதிக்கப்பட்டது |

‘

**// ஒம் // திரு . ஆர் வினோத் பி.எஸ்சி**
**தனிஅலுவலர் / ஆணையாளர்**
**பெரம்பலூர் நகராட்சி**